பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 75

01.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற மின்வாரிய உதவி பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.சிவசெல்வன், தன்னுடைய வீட்டிற்கு கூடுதல் ஒருமுனை மின்சார இணைப்பு வேண்டி தாம்பரம் கடப்பேரி மின் பகிர்மான கழக அலுவலகத்தில் கடந்த 09.07.2026 அன்று விண்ணப்பித்து அதற்குண்டான அனைத்துவிதமான கட்டணங்களும் செலுத்தப்பட்டது, அந்த விண்ணப்பமானது கடந்த 06.08.2026 அன்று உதவி பொறியாளர், அவர்களால் நிராகரிக்கப்பட்டது. பின் மேம்படுத்தப்பட்ட மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்தார். மேலும் புகார்தாரர் மின் இணைப்புக்குண்டான அனைத்து வயரிங் வேலைகளையும் முடித்து வைத்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை திரு.சந்திரன், உதவி பொறியாளர், கடப்பேரி மின் பகிர்மான கழக அலுவலகம், தாம்பரம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். பின்னர் லஞ்ச பணத்தை ரூ.10,000/-லிருந்து ரூ.7,000/-மாக குறைத்து கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 01.09.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சந்திரன், உதவி பொறியாளர் அவர்கள் ரூ. 7,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் திரு.சந்திரன் அவர்களிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.12,540/- கைப்பற்றப்பட்டது.

PRESS RELEASE – 75
01.09.2026

ASSISTANT ENGINEER, TNEB, ARRESTED FOR BRIBE

The complainant Tr. J. Sivaselvan, had applied for additional Single phase EB connection on 09.07.26 and paid the fees. The application was rejected on 06.08.26 by the AE, TNEB. Then the complainant applied for up gradation connection and completed all the wiring works. Tr.Chandran, AE., TNEB demanded Rs. 10,000 as bribe. Later Tr.Chandran, AE reduced the bribe amount from Rs.10,000/- to Rs.7,000/-. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Chennai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (01.09.2026). During trap proceedings, Tr.Chandran, Assistant Engineer, received the bribe amount of Rs.7,000/- from the complainant. An unaccounted money of Rs.12,540/- also seized. The accused was arrested and remanded.